## முதலமைச்சரின் வழிகாட்டுதலில் – தமிழ்நாட்டின்

# மருத்துவக் கட்டமைப்பு உலகத் தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது!

## ஈரோட்டில் – 7 புதிய திட்டப் பணிகளைத் திறந்து வைத்து – மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு!

ஈரோடு,நவ.23-

**தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலோடு தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பு உலகத்தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது என்று ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், சேஷன் நகர் பகுதியில் 21-11-2024 அன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ரூ.3.47 கோடி மதிப்பீட்டில் 7 புதிய திட்டப்பணிகளை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

இன்றைக்கு ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் புதிதாக் கட்டப்பட்டிருக்கிற கட்டிடங்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. தாளவாடி வட்டம், சேஷன்நகர் பகுதியில் ரூ.47.56இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட துணை சுகாதார நிலையம், ரூ.54.83 இலட்சம் மதிப்பீட்டில் உக்கரம் ஆரம்ப சுகாதார நிலைய பொது சுகாதார அலகு கட்டடம், ரூ.33 இலட்சம் மதிப்பீட்டில் புஞ்சைபுளியம்பட்டி ஆரம்ப சுகாதார நிலைய செவிலியர் குடியிருப்பு கட்டடம், ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் நம்பியூர் வட்டார பொது சுகாதார அலகு கட்டடம், ரூ.53.74 இலட்சம் மதிப்பீட்டில் திங்களூர் வட்டார பொது சுகாதார அலகு கட்டடம், ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் பவானி மண் தொழிலாளர் துணை சுகாதார நிலைய கட்டிடம், எல்லாவற்றிற்கும் மேலாக தாளவாடி ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் கட்டப்பட்ட ரூ.78 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடம், என மொத்தம் ரூ.3.47 கோடி மதிப்பீட்டில் 7 புதிய திட்டப்பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடுத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 100 படுக்கைகளுடன் தீவிர சிகிச்சைப் பிரிவு!

ஈரோடு மாவட்டத்தை பொறுத்தவரை அரசின் திட்டங்களால் தன்னிறைவு பெற்ற மாவட்டம் என்கின்ற வகையில், மிக சிறப்பான முறையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 100 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டிடம், போதை மீட்பு மையம், அந்தியூர் அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டிடம், கோபிசெட்டிபாளையம் அரசு மருத்துவமனையில் ஒருங்கிணைந்த ஆய்வகக் கட்டிடம், சத்தியமங்கலம் புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், சித்தோடு வட்டார பொது சுகாதார அலகு, கருங்கல்பாளையம், ராஜாஜிபுரம் மற்றும் சூரம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதல் கட்டிடம், திண்டல் ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டிடம், டி.என்.பாளையம் கள்ளிப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டிடம், அத்தாணியில் வட்டார பொது சுகாதார அலகு, கருமாண்டி செல்லிபாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டிடம், பி.கொரவம்பாளையம், ஆவுடையார்பாறை, நேதாஜிசாலை எம்.ஜி. பாளையம், ராஜாஜிபுரம் வீரப்பன் சத்திரம், சூரம்பட்டி அணைக்கட்டு, ராயபாளையம் புதூர், காந்திஜி சாலை, ராஜாகாடு திண்டல் ரங்கம்பாளையம், கருமாண்டி செல்லிபாளையம் கந்தம்பாளையம், பர்கூர், கும்டாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் துணை சுகாதார நிலையங்கள் என மொத்தம் ரூ.61.32 கோடி செலவில் 34 மருத்துவக் கட்டிடங்கள் பணிகள் நடைபெற்று வருகிறது.

### செவிலியர் குடியிருப்பு – பயிற்சி மையம்!

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 18 நகர்புற நலவாழ்வு மையங்கள், 3 துணை சுகாதார நிலைய கட்டிடங்கள்,16 ஆரம்ப சுகாதார நிலையங்களில் செவிலியர் குடியிருப்பு, சித்த மருத்துவ பிரிவு, மருத்துவர் குடியிருப்பு, செவிலியர் குடியிருப்பு, துணை செவிலியர் பயிற்சி மையம், டிஜிட்டர் எக்ஸ்ரே கருவி, வட்டார பொது சுகாதார அலகு கட்டிடங்கள், சத்தியமங்கலம் அரசு மருத்துவமனையில், சித்தா மருத்துவ பிரிவு, ஈரோடு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் 8 தளங்கள் கொண்ட பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவ கட்டிடம், தாய்பால் வங்கி, கோபிசெட்டிப்பாளையம் அரசு மருத்துவமனையில் சீமாங் கட்டிடம், சத்தியமங்கலம் அரசு மருத்துவமனையில் பேவர் பிளாக் சாலை திறப்பு, ஜெனரேட்டர், ஊவுபு, பவானி அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டிடம் ஈரோடு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், சீமாங் கட்டிடம், ஒருங்கிணைந்த சேவை மையக் கட்டிடம், ரோட்டரி கட்டிடம் மற்றும் ஒளிரும் கட்டிடம் என இது வரை ரூ.118.49 கோடி செலவில் பல்வேறு மருத்துவ கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் 375துணை சுகாதார நிலையங்கள்,76 ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருந்தகம் , 1 மாவட்ட தலைமை மருத்துவமனை, 2 வட்டம் சாரா மருத்துவமனை, 5 வட்டார மருத்துவமனை, 1 மருத்துவக் கல்லூரி மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. தமிழக முதலமைச்சர் அறிவிப்பின்படி708 நகர்ப்புற நலவாழ்வு மையம் அமைக்கும் வகையில், ஈரோடு மாநகராட்சியில்21, கோபிசெட்டிபாளையம் நகராட்சி 1 என 22 நலவாழ்வு மையங்களில், தமிழ்நாடு முதலமைச்சர் ஈரோடு மாநகராட்சியில் - 17, கோபிசெட்டிபாளையம் நகராட்சி - 1 ஆகிய 18 இடங்களில் திறந்து வைத்துள்ளார்கள். மேலும், ஈரோடு மாநகராட்சி பகுதியில் 4 இடங்களில் பணிகள் நடைபெற்று வருகிறது.

மானியக் கோரிக்கை அறிவிப்புகள் 2024-25-ல் ரூ.19.80 கோடி மதிப்பீட்டில் 16 அறிவிப்புகளின் மூலம் ஈரோடு மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றிற்கு பல்வேறு மருத்துவ கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும்,

ரூ.8.5 கோடி மதிப்பில் ஈரோடு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில், எம்.ஆர்.ஐ.ஸ்கேன் கருவி, ரூ.87 இலட்சம் மதிப்பில் மகப்பேறு சிறப்பு மையம் மற்றும் மொடக்குறிச்சி சமுதாய சுகாதார நிலையத்தில் ஊவுபு. மல்டிபாராமானிட்டர் மற்றும் கோபி செட்டிபாளையம் அரசு மருத்துவமனை, மொடக்குறிச்சி சமுதாய சுகாதார நிலையத்தில் இதர கருவிகள் வழங்கப்படும்.

மேலும், ஜம்பை, பி.புலியம்பட்டி, தாளவாடியில் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம், பி.மேட்டுப்பாளையம், அஞ்சூர், எருட்டிபாளையம், குந்திரி பகுதியில் துணை சுகாதார நிலையங்கள், கடம்பூர், டி.ஜி.புதூர் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டப்படவுள்ளது. கருப்பைவாய், மார்பக மற்றும் வாய் புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்க சமுதாயம் சார்ந்த புற்றுநோய் பரிசோதனைத் திட்டம் மாவட்டம் முழுவதும் செயல்படுத்தப்படும். மக்களைத் தேடி ஆய்வகம் திட்டத்தின் கீழ், இரண்டாம் நிலை மருத்துவமனைகளில் செமி ஆட்டோ அனலைசர், செல் கவுன்டர் மற்றும் இதர ஆய்வகக் கருவிகள் வாங்குதல், அனைத்து அரசு மருத்துவ நிலையங்களிலும் தகவல் மேலாண்மை மற்றும் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்த கணினிகள், அச்சுப்பொறிகள் மற்றும் ஸ்கேனர்கள் உள்ளிட்ட பல்வேறு உபகரணங்கள் வாங்குதல் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

### தேசிய தர உறுதி நிர்ணய திட்ட விருது!

கடந்த 2012ஆம் ஆண்டு முதல் 2024 வரை 12 ஆண்டுகளாக தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசின் மூலம் 614 விருதுகள் வழங்கப்பட்டுள்ளது. அதில் அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் 10 ஆண்டுகளுக்கு 69 விருதுகள் பெறப்பட்டிருக்கிறது. ஆனால் கடந்த 3 ஆண்டுகளில் திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு தேசிய தர உறுதி நிர்ணய திட்ட விருது 545 வழங்கப்பட்டுள்ளது. இதில் ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு அரசு மருத்துவமனை, சித்தோடு சமுதாய ஆரம்ப சுகாதார நிலையம், நம்பியூர் ஆரம்ப சுகாதார நிலையம், பருகூர், சிறுவளூர், சித்தோடு, சென்கல், கொடியலூர், பெரியசோமூர், பெரியசோமூர், கம்பை, பவானிநகர், கோபிசெட்டிபாளையம், அம்மாபேட்டை, வெள்ளோடு, சூரியபாளையம், வேப்பம்தட்டு, நேதாஜி நகர் என்று 29 ஊர்களுக்கு, 29 விருதுகள் வழங்கப்பட்டுள்ளது. இதை எதிர்க்கட்சித் தலைவர் அறிந்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக இதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.



### புற்றுநோய் கண்டுபிடிப்பு பரிசோதனை திட்டம்!

அதேபோல் லக்சயா விருதுகள் கடந்த 2017ஆம் ஆண்டு தொடங்கி 2024ஆம் ஆண்டு வரை கடந்த 7 ஆண்டுகளாக மகப்பேறு அறை, கர்ப்பிணிகளுக்கான அறுவை அரங்கின் தரம் உயர்த்தும் திட்ட சான்றிதழ் தமிழகம் முழுவதும் இது வரை84 வழங்கப்பட்டுள்ளது. கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் 4 ஆண்டுகளில் 29 விருதுகள் பெறப்பட்டிருக்கிறது. திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றப் பிறகு கடந்த மூன்றரை ஆண்டுகாலத்தில் 55 விருதுகள் பெறப்பட்டிருக்கிறது. இதில் ஈரோடு மாவட்டத்தில் கோபிசெட்டிப்பாளையம் மற்றும் சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சென்னை ஓமந்தூரார், அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை, காஞ்சிபுரம் மாவட்டம், காரப்பேட்டை, அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், புற்றுநோய் சிகிச்சைக்கான அதிநவீன மருத்துவ உபகரணங்கள், தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஒருங்கிணைந்த புதிய புற்றுநோய் சிகிச்சை பிரிவு, திருச்சி, மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்படும் முதியோர்களுக்கு புற்றுநோய் கண்டுபிடிப்பு பரிசோதனைகள் செய்யும் திட்டம் தொடங்கி வைத்துள்ளார்கள்.

இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு புற்றுநோய் சிகிச்சைக்கான தேவையான கோபால்ட் கருவி 6 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பழங்குடியினர் மக்களுக்காக தாமரைக்கரை, துணை சுகாதார நிலையத்தில் மலை வாழ் மக்கள் நலன்களுக்காக நடைபெற்ற நிகழ்ச்சியில் அந்தியூர் சுற்றுவட்டார மலை கிராமங்களில் வசிக்கும் மலைவாழ் மக்கள் பயன்பெறும் வகையில் புதிய 108 அவசர ஊர்தி, பர்கூர் மலை வாழ் மக்களுக்கு பயன் அளிக்கும் வகையில் புதிய நடமாடும் மருத்துவக் குழு வாகனம், அந்தியூர் அரசு தலைமை மருத்துவமனை பிரசவித்த மலைவாழ் தாய்மார்களை வீடுவரை கொண்டு சென்று விட புதிய இலவச தாய்சேய் நல ஊர்தி 108 வாகனம் வழங்கப்பட்டுள்ளது.

ஹீமோகுளோபினோபதி தடுப்பு திட்டத்தில் பொதுவான இரத்தம் சார்ந்த நோய்களான தலாசீமியா, சிக்கிள் செல் இரத்த சோகை நோய் களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தடுப்பு மற்றும் சிகிச்சை மேற்கொள்ளும் வகையில், 1.21 இலட்சம் மாணவர்களுக்கு ஹீமோகுளோபினோபதிக்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, அதில் 9 சதவிகித நபர்களுக்கு நோய் கடத்தும் தன்மையுடையவர் (உயசசநைச) என கண்டறியப்பட்டது. இத்திட்டம் பழங்குடியின மக்கள் அதிகம் வகிக்கும் 30 பழங்குடியின வட்டாரங்களிலுள்ள 78,949 கருவுற்ற தாய்மார்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டு, இந்திய அளவிலேயே முன்னோடி திட்டமாக திகழ்கின்றது.

### பழங்குடியினருக்கு போக்குவரத்து சேவை!

பழங்குடியின தாய்மார்களுக்கு பிரசவத்திற்கு உகந்த சூழலை உருவாக்கி மருத்துவ மற்றும் சத்தான உணவு போன்ற கூடுதல் கவனிப்பை வழங்குவதை உறுதி செய்யும் வகையில் பிரசவ காத்திருப்பு அறை அமைக்கப்பட்டுள்ளது. இதில் 794 பழங்குடியின கர்ப்பிணித் தாய்மார்கள் அனுமதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சைகள் பெற்று பயனடைந்துள்ளனர். தொலைதூரம் மற்றும் எளிதில் சென்றடைய முடியாத பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினருக்கு, உரிய நேரத்தில் வழங்க வேண்டிய அவசர மருத்துவ போக்குவரத்து சேவைக்காக 100 ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன.

நீலகிரி, கோயம்புத்தூர், சேலம், திருவண்ணாமலை, நாமக்கல், தர்மபுரி மற்றும் வேலூர் போன்ற பழங்குடியினர் அதிக அளவில் வசிக்கும் மாவட்டங்களில் பழங்குடியினர் நல ஆலோசகர்கள் மூலம் 10 அரசு மருத்துவமனைகளில் சேவைகள் வழங்குகின்றனர். வட்டாரங்களில் உள்ள நடமாடும் மருத்துவக் குழுக்கள் அல்லாமல் கூடுதலாக 20 பழங்குடியினருக்கான பிரத்யோகமான நடமாடும் மருத்துவக் குழுக்கள் 14 மாவட்டங்களில் உள்ள பழங்குடியினர் வட்டாரங்களில் செயல்பட்டு வருகின்றது.

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் முதல் சேவை 18,22,062 நபர்களுக்கும், தொடர் சேவை 7,35,743 நபர்களுக்கும் 100 சதவீதம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் 6 அரசு மருத்துவமனை, 10 தனியார் மருத்துவமனைகளில் 6750 நபர்களுக்கு ரூ.7,34,75,701/-மதிப்பில் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ் 171 முகாம்கள் நடத்தப்பட்டு 157455 மக்கள் பயன்பெற்றுள்ளனர். தமிழகம் முழுவதும் இருதய நோயினால் ஏற்படும் உயிரிழப்பினை தடுக்கும் பொருட்டு இதயம் காப்போம் தொடங்கி வைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இதில் இருதய பாதுகாப்பு மருந்துகளான ஆஸ்பிரின், க்ளோபிடோக்ரல், அட்ரோவாஸ்டாட்டின் மாத்திரைகள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 536, துணை சுகாதார நிலையங்களில் 22 என 558 வாங்கி பயன்பெற்றுள்ளனர்.

### சிறுநீரகம் பாதுகாப்புத் திட்டம்!

சிறுநீரக செயலிழப்பை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் பொருட்டு சிறுநீரகம் பாதுகாப்பு திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு, ஆரம்ப சுகாதார நிலையங்களில்386 நபர்களும், துணை சுகாதார நிலையங்களில் 36நபர்களும் என 422 நபர்கள் பயனடைந்துள்ளனர். மக்களைத் தேடி மருத்துவம் என்ற மகத்தான திட்டத்தை தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்களின் உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் உள்ளிட்ட தொற்றா நோய் பரிசோதனைகளை மேற்கொள்ள, முதற்கட்டமாக ரூ.43.89 இலட்சம் செலவில் சுமார் 711 தொழிற்சாலைகளில் உள்ள 8.53 இலட்சம் பணியாளர்களுக்கு தொழில் சார் சுகாதார மையங்கள் மூலமாக தொற்றா நோய் பரிசோதனை முகாம்கள் 09.01.2024 அன்று திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் வட்டாரத்தில் உள்ள Hyundai Mobis Plant 2 தொழிற்சாலையில் தொடங்கி வைக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வைத்தக் கோரிக்கையை ஏற்று ஈரோடு, திருப்பத்தூர், கன்னியாகுமரி மற்றும் இராணிப்பேட்டை ஆகிய நான்கு மாவட்டங்களில் உள்ள துணை சுகாதார நலவாழ்வு மையங்களில் (HWC-HSCs), இடைநிலை சுகாதார பணியாளர்கள் (MLHP) மூலம்"சமூக அளவிலான புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள்" முகாமானது, ஈரோடு மாவட்டத்தில் காளிங்கராயன்பாளையம், துணை சுகாதார நிலையத்தில் 2022ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19ஆம் தேதி தொடங்கி வைக்கப்பட்டது. இதில் 4,67,143 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த மாவட்டங்களில் 123 பேருக்கு புற்றுநோய் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டிருக்கிறது. அதில் 58 பேர் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இந்தப் பாதிப்புகள் இருப்பது தொடக்க நிலையிலேயே கண்டறிந்து, அவர்களின் உயிர்களைக் காப்பாற்ற தொடர்ந்து மருத்துவச் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் குறிப்பாக மேற்கண்ட மாவட்டங்களில் மட்டும் புற்றுநோய்க் கண்டறியும் பரிசோதனைகள் மட்டுமல்லாமல், தமிழ்நாடு முழுவதும் இருக்கிற அனைத்து 38 வருவாய் மாவட்டங்களிலும் ரூ.27 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, 30 வயது தொடங்குகிற பெண்கள், மற்றும் ஆண்களுக்கும் புற்றுநோய்க் கண்டறியும் பரிசோதனைகள் மேற்கொள்ள உத்தரவிட்டிருக்கிறார்கள். அதேபோல் தமிழ்நாட்டில் 2,208 மலைக்கிராமங்களில், சுமார் 10 இலட்சம் மலைவாழ் மக்கள் வசித்து வருகின்றனர். பழங்குடி மக்களிடையே காணப்படும் ஹீமோகுளோபினோபதி, தாலசீமியா, சிக்கில் செல் அனிமீயா போன்ற மரபணு நோய் கண்டறிவது குறித்து மரபணு ஆலோசனை வழங்கும் திட்டம் ஈரோடு மாவட்டம் தாளவாடி மற்றும் சத்தியமங்கலத்தில் தொடங்கி 2022ஆம் ஆண்டு ஜூலை 19ஆம் தேதி வைக்கப்பட்டது. தாளவாடி வட்டாரப் பகுதியில் உள்ள கர்ப்பிணிப் பெண்கள் 21,832 பேருக்கு இந்நோய் பாதிப்பிற்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. அதில் 350 பேருக்கு அந்த பாதிப்புகள் கண்டறியப்பட்டிருக்கிறது.

### மரபணு நோய் கண்டறியும் திட்டம்!

கர்ப்பிணிப் பெண்களின் கணவர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டதில் 56 ஆண்களுக்கு இந்த நோய் பாதிப்புகள் கண்டறியப்பட்டிருக்கிறது. 6 முதல் 12 வகுப்பு வரை படிக்கும் மாணவிகள் 21,341 பேருக்கு நோய் பாதிப்பிற்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் 417 பேருக்கு நோய் பாதிப்பு இருப்பதாக கண்டறியப்பட்டிருக்கிறது. ஆரம்ப நிலையிலேயே இப்பாதிப்புகள் இருப்பது கண்டறியப்பட்டு அதற்கான சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

திண்டுக்கல் மாவட்டம்- ஒட்டன்சத்திரம்,கொடைக்கானல் மற்றும் பழனி,ஈரோடு மாவட்டம் - சத்தியமங்கலம் மற்றும் தாளவாடி, கன்னியாகுமரி மாவட்டம் - திருவட்டார், மேல்புறம் மற்றும் தோவாளை, திருச்சி மாவட்டம் - துறையூர் மற்றும் உப்பிலியாபுரம், திருப்பத்தூர் மாவட்டம் - மாதனூர் மற்றும் நரியம்பட்டு ஆகிய 12 வட்டாரங்களில் மரபணு ஆலோசனை மற்றும் நோய் உள்ளவர்களுக்கு சிகிச்சைகளும் வழங்கப்படுகிறது. மேலும் பழங்குடியினருக்கு 100% கொரோனா தடுப்பூசி செலுத்திய இந்தியாவின் முதல் மாவட்டம் தமிழ்நாட்டின் நீலகிரி ஆகும்.மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் யாரும் எளிதில் செல்ல முடியாத போக்குவரத்து வசதியற்ற மலை கிராமப் பகுதிகளில் வாழும் மக்களுக்கும் அவர்களின் வீடுகளை தேடிச் சென்று மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் தாளவாடி மக்கள் பிரேத பரிசோதனைக்கு சத்தியமங்கலம் செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதாகவும், இப்பகுதிக்கு என பிரேத பரிசோதனை கூடம் அமைத்துத்தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இப்பகுதி மக்களின் கோரிக்கையினை ஏற்று ரூ.78.00 இலட்சம் மதிப்பில் பிரேத பரிசோதனை கூடம் கட்டப்பட்டுள்ளது. இந்த அரசு மக்களுக்கான அரசு. மக்களின் கோரிக்கைகளை ஏற்று உடனடியாக நிறைவேற்றக்கூடிய அரசு. தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட மாடல் அரசு, எல்லாருக்கும் எல்லாம் என்கின்ற சிறப்பான ஆட்சியை நடத்தி வருகின்றார்என தெரிவித்தார்.


கடந்த செப்டம்பர் 25ஆம் தேதி அமெரிக்காவில் உள்ள ஐ.நா.சபையின் 79வது பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அதில் உலகின் தொற்றா நோய்களுக்காக (Non Communicable Diseases) மருத்துவம் பார்த்ததில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக இருந்துகொண்டிருக்கிறது. மக்களைத் தேடி மருத்துவத் திட்டம் என்ற மகத்தான திட்டத்தின் மூலம் 1.90 கோடி பயனாளிகளுக்கு வசிக்கிற இல்லம் தேடிச் சென்று மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என்பதைப் பாராட்டி ஐ.நா. தமிழ்நாட்டிற்கு இந்தாண்டிற்கான United Nation Integrated Taskforce Award கொடுத்திருக்கிறார்கள். வரும் நவம்பர் 29 ஆம் தேதி விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் 2 கோடியாவது பயனாளிக்கு மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தில் மருந்துப்பெட்டகத்தை வழங்க இருக்கிறார் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரையாற்றினார்.



முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட ”ஊட்டச்சத்து உறுதி செய்–எனும் திட்டம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் நேற்று (22.11.2024) சென்னை, சைதாப்பேட்டையில் நடைபெற்ற நிகழ்வில் குழந்தைகளின் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட மாவட்ட அலுவலர் திருமதி.கிருஷ்ணவேணி, மாமன்ற உறுப்பினர்கள் த.மோகன்குமார், சுப்பிரமணி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## வாட்ஸ் அப்பில் வலம் வருவது!




## சென்னை கிழக்கு மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர்

# கழக முன்னோடி எம்.ஆர்.வெங்கடேசன் படத்திறப்பு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் - சொ.வேலு பங்கேற்பு!

*சென்னை, நவ.23-*

*சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி துணை அமைப்பாளர் எம்.ஆர். வெங்கடேசன் அவர்களின் 16-ஆம் நாள் நினைவு அஞ்சலி மற்றும் படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (23.11.2024 - சனிக்கிழமை) காலை 10 மணியளவில் எண். 44/1, சின்ன தம்பி தெரு, குயப்பேட்டையில் நடைபெறுகிறது.*

*கழக செயல் வீரர் எம்.ஆர். வி.ராஜேந்திரன் நிகழ்ச்சிக்கு தலைமை வகிக்கிறார்.*

*எழும்பூர் பகுதிக் கழகச் செயலாளர் சொ.வேலு எம்.சி. முன்னிலை வகிக்கிறார்.*



*அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி., பி.எம்.யாழினி ஆகியோர் கலந்து கொண்டு எம்.ஆர்.வெங்கடேசன் திருவுருவப் படத்தை திறந்து வைத்து மலரஞ்சலி செலுத்துகின்றனர்.*

*இதில் எழும்பூர் வடக்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் சு.மனோகர், ந.பாலு, தி.தயாளன், வி.அபாய், சி.சேகர், ஆர். எம்.ரங்கநாதன் மற்றும் மாவட்டக் கழக, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள், இளைஞரணிகள் மற்றும் கழகத்தினர் கலந்து கொள்கின்றனர்.*

*கழக செயல்வீரர் எம்.ஆர். வி.ஆர். பாரத் நன்றி கூறுகிறார்.*

## பார்வையற்றோருக்கான

# புத்தகம் கட்டுநர் பயிற்சி தொடர்ந்து நடத்தப்படும்!

## மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அறிவிப்பு!

சென்னை, நவ.23

பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசினர் தொழிற்பயிற்சி மையத்தில் பயிற்றுவிக்கப்படும் பார்வையற்றோருக்கான புத்தகம் கட்டுநர் பயிற்சியினை 2024-2025-ஆம் ஆண்டு முதல் நிறுத்தம் செய்து வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண். 21 மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந1.1) த் துறை நாள் 20.09.2024 மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை மற்றும் செய்திக் குறிப்பு நாள் 19.10.2024 இன் படி திரும்பப் பெறப்பட்டது.

பார்வை மாற்றுத்திறனாளிகளின் தொடர் கோரிக்கையினை அரசு பரிசீலத்து பூவிருந்தவல்லி பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசினர் தொழிற்பயிற்சி மையத்தில் பயிற்றுவிக்கப்படும் பார்வையற்றோருக்கான புத்தகம் கட்டுநர் பயிற்சி தொடர்ந்து நடத்தப்படுவதோடு வேறு சில பயிற்சிகளும் தொடங்கப்படும்.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## கிராம சபைக் கூட்டத்தை இன்று நடத்த தமிழக அரசு உத்தரவு!

சென்னை, நவ. 23–

கடந்த, 1 ம் தேதி உள்ளாட்சிகள் தினத்தன்று நடக்கவிருந்த கிராம சபைக் கூட்டம், நிர்வாக காரணங்களுக்காக ஒத்திவைக்கப்பட்டது. இந்த கிராம சபைக் கூட்டம் இன்று (23.11.2024) நடக்கிறது.

இது தொடர்பாக தமிழ்நாடு அரசு நேற்று அரசாணை வெளியிட்டுள்ளது.

பஞ்சாயத்தில் சிறப்பாக பணிபுரிந்த ஊழியர்களை சிறப்பித்தல், மகளிர் சுய உதவிக்குழுக்களை கவுரவித்தல், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து விவாதித்தல், தூய்மை பாரத இயக்க (ஊரகம்) திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், ஜல் ஜீவன் திட்டம், தீன்தயாள் கிராமப்புற திறன் மேம்பாட்டு திட்டம் ஆகியவை குறித்து இந்த கிராம பை கூட்டத்தில் இந்த கிராம சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று தெரிவிக்கபட்டுள்ளது.

## ச.பரமசிவம் தலைமை! கழகத் தோழர் அண்ணாநகர் பி. பாண்டியன் மனைவி

# திருமதி சிவகாமி பாண்டியன் முதலாமாண்டு நினைவுநாள் நிகழ்ச்சி!

## நே.சிற்றரசு - தயாநிதி மாறன் எம்.பி. - எம்.கே.மோகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

*சென்னை, நவ.23-*

*அண்ணாநகர் 100வது வட்டம், மொழிப்போர்த் தியாகி பி.பாண்டியன் மனைவி திருமதி சிவகாமி பாண்டியன் அவர்களின் முதலாமாண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி இன்று (23.11.2024 சனிக்கிழமை) மாலை 7 மணியளவில் வீரராகவன் தெரு, டெய்லர்ஸ் சாலை கீழ்ப்பாக்கத்தில் நடைபெறுகின்றது.*

*நிகழ்ச்சிக்கு அண்ணா நகர் வடக்கு பகுதிச் செயலாளர் ச.பரமசிவம் தலைமை வகிக்கிறார்.*

*ஆ.ஏகாம்பரம், வசந்தி பரமசிவம் எம்.சி., ஆ.ஐயப்பன், இரா.இளங்கோவன், இரா. சாந்திபாய், எஸ்.ஜெயகாந்த் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*திருவுருவப்படத்தை*



*மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு திறந்து வைக்கிறார்.*

*மேலும் இதில் தயாநிதி மாறன் எம்.பி., எம்.கே. மோகன் எம்.எல்.ஏ., கார்த்திக் மோகன், எஸ்.சேரன், ஏ. டி.முருகன், கராத்தே ஆனந்தன், ராணி ரவிச்சந்திரன், யோகேஷ்வரி, து.விக்டர், ஆர். என்.துரை, வி.எஸ்.கலை, ஏ. சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டீன் பாபு, பா.பிரபு, கே.பி.சுரேந்தர், எம்.எஸ்.சேகர், எஸ்.நரேந்திரன், கு.பாபு, க.கோவிந்தராஜ், டி.பி.திருமலை, பி. சந்திரசேகர், எம்.ஜி.ரவிக்குமார், பி.ஜெய சங்கர், அருள் கண்ணன், மெட்டில்டா கோவிந்தராஜ், புஷ்பலதா ஜெயசங்கர், பி.ஜெ. கைலாசம், ஜி.மணிவண்ணன், பி.உதயகுமார், க.ஏழுமலை, எஸ்.வெங்கடேஷ், எல்.பாஸ்கர், என். வீரமணி, ஆர்.பொன்முடி, என்.கண்ணன், எச்.மீனா, அமுதா நம்பிராஜன், கஸ்தூரி, ஏ. பூவரசி, பி.உதயகுமார், வி.விவேக் ராஜா, எஸ். சதீஷ் பிரபு, பி.அபிஷேக், இ.ராஜ்கமல் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.*



தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி 21.11.2024 அன்று ஆஸ்திரேலியாவில் சிட்னி நகரில் உள்ள நியூ சௌத் வேல்ஸ் மாகாண பாராளுமன்றத்திற்கு வருகை புரிந்து அம்மாநிலத்தின் பிரிமியர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார்.